# பிளேட்டோவின் அரசியல் மெய்யியற் சிந்தனைகளும் சமகால ஜனநாயக அரசு பற்றிய எண்ணக்கருக்களும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு.

# Plato's Political Philosophical thoughts and the Concepts of Contemporary Democratic State -A comparative study

S.Jeganathan[1]


***Abstract***

*Philosophy is not a distinctive research sector which restricts a unique research matter but it could be conceived a world view. Philosophy admits in each and every sector to design their structure by delivering the questions under the research basis. Hence, when we do some research on politics, it could be labelled as a Political Philosophy. As the pioneer thinker of political philosophy, Plato attempted to create an ideal state through his magnum opus 'The Republic'. Plato's essential motto is 'The king must be a Philosopher, or the Philosopher must be a King'. It is remarkable Question that has Plato's motto influenced the concepts of contemporary democratic states? The democracy, which lies on institutionalized willpower, is not only a body of governance but also it is the way of Life. This article attempts to compare the various concepts such as justice, rights and duty, equality, empowerment, legitimacy, constitutionalism and its activities, which embody the central themes of democracy and individual liberty that represent the responsible governance with Plato's Political thoughts. comparative, analytical and critical methods have been used in this the research.*


***Key words:*** *, Ideal state, Separation of power, Justice, Liberty, The concepts of Democratic state, The Republic.*

## 1.0 அறிமுகம்

அரசியல் கருத்துக்கள் தொடர்பான ஒரு மதிப்பிடலாக அமையும் அரசியல் மெய்யியலில் அரசின் கட்டமைப்பு அல்லது ஆட்சிமுறை அதனது பண்புகள் மற்றும் எண்ணக்கருக்கள் முதலான விடயங்கள் ஆய்வு செய்யப்படுகின்றது. அரசியல் கருத்துடன்பாடுகள், நம்பிக்கைகள், கொள்கைகள் தொடர்பாக நாடு, அரசு, அரசாங்கம், குடிமக்கள் மற்றும் அரசியல் எண்ணக்கருக்கள் தொடர்பாக அரசியல் மெய்யியல் தனது கரிசனையைச் செலுத்துகின்றது. (ஜெகநாதன். சோ., 2018: 19). பிளேட்டோ மக்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசு எனும் நிறுவனம் அத்தியாவசியமானது என்றார். இத்தகைய அரசு தொடர்பான பிளேட்டோவின் சிந்தனைகள் ஒரு

[1] Senior Lecturer, Department of Philosophy & Value Studies, Eastern University, Sri Lanka. E- Mail : jeganathans@esn.ac.lk

இலட்சியவாத போக்கைக் கொண்டதாக அமைவதோடு அது சமகால ஜனநாயக ஆட்சிமுறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**2.0 ஆய்வு நோக்கங்கள்**

பிளேட்டோவின் அரசியல் மெய்யியற் சிந்தனையின் அடிப்படை அம்சங்களைத் தெளிவுபடுத்துதல்.

அரசு பற்றிய ஜனநாயக எண்ணக்கருக்களை அடையாளப்படுத்தல்

பிளேட்டோவின் இலட்சிய அரசு பற்றிய சிந்தனைகள் சமகால அரசியற் செயற்பாடுகளில் காணப்படுமாற்றினை ஒப்பிட்டு விளக்குதல்.

**3.0 ஆய்வு முறையியல்**

மெய்யியல் ஆய்வுகள் களத்திற்கு நேரடியாகச் சென்று தரவுகளைப் பெற்று இடம்பெறுவதில்லை. மனிதர்களால் உருவாக்கப்பட்ட நூல்கள், கட்டுரைகள் மற்றும் முதல்தர தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளும் துறையாக மெய்யியல் விளங்குகிறது. இந்த ஆய்வுக்கான மூலங்கள் என்ற வகையில் அரசியல் விஞ்ஞானம், அரசியல் மெய்யியல் தொர்பாக எழுதப்பட்ட நூல்கள் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு முறையியல் என்ற வகையில் மெய்யியலுக்குரிய நம்பிக்கை பற்றிய விமர்சன ரீதியான மதிப்பிட்டு முறை, எண்ணக்கருக்களின் தெளிவுபடுத்துகை முறை என்பனவும் பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை மற்றும் விமர்சன முறை என்பனவும் பயன்படுத்தப்பட்டடுள்ளன. எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறை இங்கு பின்பற்றப்படுகிறது.

**4.0 முடிவுகளும் கலந்துரையாடலும்**

**4.1 பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனையின் அடிப்படைகள்**

கிரேக்க நாட்டைச் சேர்ந்த அரசியல் மெய்யியலாளரும் ஒழுக்கவியலாளரும் தத்துவவியலாளருமான பிளேட்டோ அரசியல் மெய்யியல் கருத்துக்களை முன்வைத்து சிறப்பு பெற்றார். சோக்கிரட்டிஸின் மெய்யறிவு சார்ந்த போதனையினால் கவரப்பட்ட பிளேட்டோ சோக்கிரட்டிஸின் மாணவராவார். மெய்யறிவையும் உண்மையையும் சோக்கிரட்டிஸ் போதித்தனால் அவர் மரணதண்டனைக்கு உள்ளான சந்தர்ப்பம் பிளேட்டோவை பெரிதும் பாதித்தது. சோக்கிரட்டிஸின் அடிப்படைக் கருத்துக்களை பிளேட்டோ தனது முந்திய படைப்புக்களில் முன்வைத்தார். பிளேட்டோ தனது சொந்தக் கருத்தைக் கூட தனது ஆசிரியரைக் கதாபாத்திரமாக கொண்டே வெளிப்படுத்தினார். இவர் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள் அரசியல் மெய்யியல் கருத்துக்களைக் குறிப்பிடும் நூல்களாக குடியரசு (The Republic), சட்டங்கள் (Laws), தேசிய மைந்தன் (Statesman) ஆகிய நூல்களை நாம் குறிப்பிடுவோம்.

பிளேட்டோ தனது அரசியல் சிந்தனைகளை யதார்த்த உலகுக்கு உரியது எனக் கூறாமல் இலட்சிய உலகுக்கு உரியது எனக் கூறுகின்றார். பிளேட்டோ இவ்வாறான இலட்சியப் போதனையை தனது அரசியல் மெய்யியலில் முன்வைக்க காரணம் நடைமுறையில் இருந்த எந்தவொரு அரசாட்சி முறையும் பொது நலனுக்கு ஏற்புடையதாக இருக்காததனாலேயே ஆகும். கிரேக்கத்தில் பிளேட்டோவின் காலத்தில் மன்னராட்சி, மக்களாட்சி, உயர்ந்தோர் குழு ஆட்சி என வேறு வகையான ஆட்சி முறைகள் மாறிமாறி நடைபெற்றன. ஆனால் இவைகளில் எந்தவொரு அரசாட்சி முறைகளும் பொது மக்களின் நலனில் அக்கறை செலுத்தவில்லை. மாறாக ஆட்சியாளர்களினதும் ஆட்சியாளர்களுக்கும் வேண்டப்பட்டவர்களினதும் நலனிலே அதிக அக்கறை செலுத்தியதனால் இத்தகைய அரசாட்சி முறையை பிளேட்டோ நிராகரித்தார்.

இலட்சிய உலகமொன்றைக் கற்பனை செய்து அவ்விலட்சிய உலகத்துக்கு அரசாட்சி முறையும் சட்ட நிர்வாக நீதி முறைமையும் மக்கள் வாழ்க்கையும் எப்படி இருக்க வேண்டும் என்று விபரித்துக் கூறும் பிளேட்டோவின் குடியரசில் நான்கு வினாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- நல்ல மனிதனின் பண்புகள் யாவை?
- ஓர் இலட்சிய சமுதாயம் எவ்வாறு அமைதல் வேண்டும்?
- இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவதில் கல்வியின் பங்கு யாது?
- ஆட்சி செய்வோரின் பண்புகள் யாவை?

போன்ற வினாக்களை காணலாம். இவை அனைத்தும் தன்னுடைய இலட்சிய அரசை நோக்காகக் கொண்டே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை பிளேட்டோவின் குடியரசு தெளிவாக வெளிப்படுத்துகின்றது. இதில் தத்துவஞான அரசரின் ஆட்சி, வகுப்புப் பிரிவுகள் (சமுதாய அமைப்பு), பெண்களின் சமநிலை, கல்வி, பொதுவுடைமை, வல்லாட்சி, அடிமை முறை என்ற அடிப்படை விடையங்களை உள்ளடக்கியதாக இவருடைய இலட்சிய அரசு காணப்படுகின்றது.

இலட்சிய அரசை விளக்குவதற்காக அவ்வரசுக்கு உட்பட்ட மக்களை மூன்று வர்க்கங்களாகப் பிரித்துள்ளார் அவையாவன:

01. ஆள்வோர்
02. காப்போர்
03. தொழிலாளர்

இம்மூன்று வர்க்கத்தவர்களும் பிறப்படிப்படையிலோ அல்லது வேறு நிபந்தனையின் அடிப்படையிலோ பிரிக்கப்படவில்லை மாறாக அறிவு, திறமை என்பவற்றின் அடிப்படையிலேயே பிரிக்கப்படுகின்றனர். இவர்களை தெரிவு செய்வதற்காக பிளேட்டோ ஒரு பொதுக்கல்வி கொள்கையை அறிமுகம் செய்கின்றார். இப்பொதுக்கல்விக் கொள்கையின்படி ஆறு வயதில் இருந்து சர்வசன கல்வி வழங்கப்பட வேண்டும். கல்வியை ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி,

உயர்தரக்கல்வி என்று மூன்று பிரிவாகப் பிரிக்கும் பிளேட்டோ ஆரம்பக்கல்வியின் நோக்கம் நாட்டுக்குத் தேவையான தொழிலாளர்களைத் தெரிவுசெய்வது என்றும் இடைநிலைக் கல்வியின் நோக்கம் நாட்டுக்குத் தேவையான காப்பாளர்களைத் தெரிவுசெய்வது என்றும் உயர்நிலைக் கல்வியின் நோக்கம் ஆட்சியாளரைத் தெரிவுசெய்வது என்றும் பிளேட்டோ கூறியிருந்தார்.

பிளேட்டோவின் சிந்தனைப்படி ஆட்சியாளன் ஒருவன் முதிர்ச்சியடைந்தவனாகவும் தத்துவ ஞானியானவனாகவும் நிறைந்த ஞானம், அனுபவம் நிறைந்தவனாகவும் இருக்க வேண்டும். "தத்துவஞானிகள் ஆட்சி பொறுப்பை ஏற்க வேண்டும்ளூ அன்றேல், தற்போதைய ஆட்சியாளர்கள் தத்துவஞானிகளாக மாற வேண்டும்." என்று பிளேட்டோ தனது குடியரசில் குறிப்பிடுகின்றார். (சாமிநாத சர்மா, வே., (மொ.பெ), 1986: 193) மேலும் "உண்மையான தத்துவ அறிஞர்களின் கைக்கு அரசியலதிகாரம் வராதவரை மனித சமுதாயம் கெடுதல்களிலிருந்து தப்பிக்கவே முடியாது அரசியல்வாதிகளே தத்துவமேதைகளாகிவிடும் அற்புதமெதுவும் இல்லை." (ராகுல் சாங்கிருத்யாயன், 1985: 20) மேலும் அவன் சொத்தாசை இல்லாதவனாகவும் குடும்பம் குடித்தனம் இல்லாதவனாகவும் இருக்க வேண்டும். மேற்குறித்த நிபந்தனைகளைக் கொண்ட தனித்தலைவனே ஆட்சியாளன் ஆவான். அவன் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, பாதுகாப்புத்துறை ஆகிய சகல அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்ட தனித்தலைவனாவான். (நாராயணன். க., 1989: 44-45) அவனது ஒரே இலக்கு பொது நலனை நிறைவேற்றுவதேயாகும். பொதுநலனுக்காகத் தனிப்பட்டவர் நலன்கள் பாதிக்கப்படுவது கவனிக்கப்பட வேண்டியதில்லை. ஆட்சியாளன் மட்டுமல்லாமல் காப்பாளர்களும் தொழிலாளர்களும் கூட பொதுநலனுக்காக வாழ்தல் வேண்டும். பொதுநலனை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறையே அரசியல் நலனை நிறைவேற்றக்கூடியது என்ற பிளேட்டோவின் வாதமானது சமகால ஜனநாயக அரசியல் எண்ணக்கருக்கருக்களில் தாக்கம் செலுத்தியுள்ளது.

**4.2 ஜனநாயக அரசியல் எண்ணக்கருக்கள்**

அரசியல் எண்ணக்கருக்களில் ஜனநாயகம் என்பது மிக முக்கியமானதாகும். ஜனநாயகம் என்பது மிக உயர்ந்த அதிகாரத்தை தம்மீது கொண்டுள்ள மக்களின் அரசாங்கம் ஆகும். இது முடியாட்சிக்கு மாற்றீடாகவும் சமூக மற்றும் தனிநபர் அடக்குமுறைக்கும் எதிராகவும் தோற்றம் பெற்ற ஒரு வாழ்வியல் எண்ணக்கருவாக உள்ளது. இத்தகைய ஜனநாயகத்தில் பொது நன்மைக்காக அரசியல் தீர்மானம் மேற்கொள்ளவும் சட்டங்களை உருவாக்கவும் வேலைத்திட்டங்களை நிர்வகிக்கவும் அலுவலர்களைத் தெரிவுசெய்யவும் மக்களுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு பொறுப்புமிக்க ஆட்சியைத் தன்னகத்தே கொண்ட ஜனநாயகம் என்பது தாராண்மை வாதம், தனியாள் சுதந்திரம் என்பவற்றின் கூட்டுச்சேர்க்கையாக அமைகின்றது (யோகராஜா. ஆ., 2020: 236-239). இந்த ஜனநாயகம் என்ற அரசியல் விடயத்தினுள் நீதி, சட்டவாட்சி, சுதந்திரம், வலுவேறாக்கம், உரிமை, கடமை தண்டனை, அரசியல் பங்குபற்றல், அரசியலமைப்புவாதம் மற்றும் கல்வி போன்ற

பல்வேறுப்பட்ட எண்ணக்கருக்கள் தொடர்புப்பட்டுள்ளன. இதனை நாம் பிளேட்டோவின் சிந்தனைகளோடு தொடர்புப்படுத்தி ஆராயவேண்டும்.

### 4.3 ஜனநாயக அரசியல் எண்ணக்கருக்களும் பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகளும்

அரசு பற்றிய ஜனநாயக எண்ணக்கருக்களில் சட்டவாட்சி (Rule of Law) என்பது முக்கியமானது. சட்டம் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற விதிகளின் தொகுப்பாக இருக்கின்ற அதேவேளை அது பலாத்காரக் குணமுடையதாகக் காணப்படுகின்றது. அதாவது சட்டத்தின் முன் யாவரும் சமன், அரசின் சட்டங்களுக்கு அடிபணியாத போது தண்டனைகளுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக வேண்டி வரும். சட்டத்தை மீறியவன் தண்டிக்கப்பட வேண்டும் (Daicy. A.V., 1979: 187-203) என்ற ஏ. வி. டைசி (A.V.Daicy) இன் கருத்தும் இதனை மேலும் தெளிவுபடுத்துகின்றது. பிளேட்டோவின் சிந்தனையில் ஆட்சியாளன் தத்துவஞானியாகவும் நிறைந்த அறிவும், அனுபவமும் கொண்ட ஒரு தனித் தலைவனாகவும் உள்ளான். அவனே சட்டங்களை இயற்றும் அளவிற்கு சகல அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றான். அவன் ஒருபோதும் தவறு விடமாட்டான் (இராமானுஜாசாரி. ஆர்., 2015: 290-295) என்பதை “தமக்குத் தாமே வைத்தியம் செய்யும் நிலையிலும், அல்லது குறைந்தபட்சம் தமது உடல்நலம் குன்றாதவாறேனும் தம்மை பாதுகாத்துக் கொள்கின்றவர்களாக இருக்கின்றனர்.” (சார்ள்ஸ் வெரேக்கர், 1973: 14) எனக் குடியரசில் கூறுவதனூடாக ஆட்சியாளர்கள் நேர்மையானவர்களாக இருப்பதுடன் அவர்களின் ஆட்சியும் நேர்மையாக அமையும் என நியாயப்படுத்தும் அவரது கருத்துக்கள் சமகாலத்தில் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றன.

இன்று குற்றம் செய்தமைக்காக ஆட்சியாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டமையும் அவர்களுக்கு குற்றத்தின் தன்மையைப் பொறுத்து மரண தண்டனை கூட வழங்கப்பட்டுள்ளது. தேசத்துரோக வழக்கில் பாகிஸ்தானில் 1998-2008 வரை நாட்டின் ஜனாதிபதியாக ஆட்சி புரிந்த பர்வேஸ் முஷாப்புக்கு எதிராக அவர் நாட்டில் அவசரகாலநிலையை அறிவித்து, அரசியலமைப்புச் சட்டத்தை தற்காலிகமாக முடக்கியதுடன், சிரேஷ்ட நீதிபதிகளை சிறையில் அடைத்ததோடு, நூற்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகளை பதவியில் இருந்து நீக்கினார் என இவர் மீது தேசத்துரோக வழக்கு தொடரப்பட்டு, கடந்த 2014ஆம் ஆண்டு பெஷாவர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. இதற்கு பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்திலுள்ள விசேட நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதேபோன்று தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஸுமாவுக்கு (Jacob Zuma) அவர் ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் விவகாரம் குறித்த விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதை தொடர்ந்து, நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் பதினைந்து மாத சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. இவ்வுதாரணங்கள் பிளேட்டோ குறிப்பிடும் ஆட்சியாளன் ஒருபோதும் தவறுவிடமாட்டான் என்ற கருத்திற்கு பெரிதும் முரண்பாடான வெளிப்பாடேயாகும்.

உரிமையும் கடமையும் என்ற விடயத்தை நோக்கும் போது இவ்விருஎண்ணக்கருக்களும் வரைவிலக்கண ரீதியாக ஒன்றுடன் ஒன்று வேறுபட்டவையாக இருந்தாலும் செயற்பாட்டு ரீதியில் நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளன. இதனால்தான் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என இவை கூறப்படுகின்றன. சட்டரீதியாகவோ ஒழுக்க ரீதியாகவோ ஒன்றைப் பெறுவதற்கு ஒருவருக்கு இருக்கும் தகைமையே உரிமையாகும். அதேபோன்று சட்டரீதியாகவோ ஒழுக்க ரீதியாகவோ ஒன்றை வேண்டிநிற்கின்ற போது அதனை நிறைவேற்றிக் கொடுப்பது கடமையாகும். உதாரணமாக அரசினால் வழங்கப்படும் வாக்குரிமையைக் குறிப்பிடலாம். அதனை மக்கள் தமது கடமையாகக் கொண்டு நிறைவேற்ற வேண்டும். பிளேட்டோ தனது இலட்சிய அரசிற்கு உட்பட்டவர்கள் அனைவருக்கும் உரிமையும் கடமையும் உள்ளது. அதனை அவர்கள் தவறாது நிறைவேற்ற வேண்டும் என்றார். இன்றைய சூழலில் அரசாங்கத்திற்கு உட்பட்ட மக்களில் சிலர் வாக்களிப்பதில்லை. அளிக்கப்பட்ட வாக்குகளுள் பல நிராகரிக்கப்படுகின்றன. கள்ள வாக்குகள் அளிக்கப்படுகின்றன. எனவே உரிமை, கடமை பற்றிய பிளேட்டோவின் கருத்தும் சமகால அரசியலில் பொருத்தமற்றதாக உள்ளது.

பிளேட்டோவின் முழு குடியரசினதும் குவிமையக்கருத்து நீதி பற்றிய விசாரனை எனலாம். (அனஸ். எம். எஸ். எம்., 2018: 37) நீதி என்ற எண்ணக்கருவை பிளேட்டோவின் சிந்தனையோடு தொடர்புபடுத்தும் போது நீதியின் உள்ளடக்கமாக உரிமை, அறம், நடத்தை, நடுநிலைமை தவறாமை, மரபொழுக்கம் போன்றவற்றை குறிப்பிடுகின்றார். எல்லா நல்லவற்றுக்கும் காரணமாயும் அவை நிலை பெறுவதற்கு நிலைக்களனாகவும் அவற்றைப் பாதுகாப்பதாகவும் நீதி உள்ளது என்றார். பிளேட்டோவிற்கு முதல் பல்வேறு நீதி பற்றிய கருத்துக்கள் காணப்பட்டமையும் அவற்றின் பொருத்தபாடற்ற தன்மையையும் சோக்ரடீஸின் வாயிலாக தர்க்க ரீதியாக நிராகரித்து நீதி பற்றிய இவரது கருத்தை முன்வைக்கின்றார். நீதி பற்றி ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்களாக குடியரசில்,

**“ஒருவரிடம் நாம் பெற்ற பொருட்களை அவரிடம் திருப்பி கொடுப்பதுதான் நீதி.”**
**“நண்பர்களுக்கு நல்லது செய்தலும், தீயவர்களுக்கு (பகைவர்களுக்கு) தீமை செய்தலுமே நீதி”**
**“பலசாலிகளுக்கு எது அனுகூலமாக இருக்கிறதோ அதுவே நீதி” -குடியரசு-**

மேற்குறிப்பிட்ட வாதங்களை பிளேட்டோ தன்னுடைய தர்க்க ரீதியான கருத்துக்களால் மறுக்கின்றார். அதாவது, நல்ல மனநிலையில் ஒருவரிடம் ஒரு பொருளை பெற்றுவிட்டு அவர் சித்த சுவாதீனம் அற்ற தன்மையில் அதை எவ்வாறு அவரிடம் வழங்குவது? நண்பர்கள் மற்றும் பகைவர்கள் என்ற நிலையை எவ்வாறு வரையறுப்பது? நீதியாளனை விட அநீதியாளனே தவறான பலத்தை பிரயோகித்து செயற்படுவான் போன்ற குடியரசில் காணப்படும் தர்க்க ரீதியான வாதங்கள் நீதி பற்றிய முன்னர் காணப்பட்ட தவறான எண்ணங்களுக்கு பதிலளிக்கும் வகையில் பிளேட்டோவால் முன்வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் நீதியை உயர்வானதாக எண்ணுகின்றகின்ற போதும் அநீதியால் வருகின்ற பலாபலன்களைப் போற்றுபவர்களாகவும், அநீதி வேண்டாம் என்று சொன்னபோதும் அநீதிக்கு துணை போகின்ற தன்மையும் அநீதியை மக்கள் விரும்பி ஆதரிக்கின்ற போக்கையும் காண முடியும் என்ற பிளேட்டோவின் கருத்தை நாம் சமகால அரசியலில் தொடர்புபடுத்தும் போது அது முரண்படுகின்றது (ஜெகநாதன். சோ., 2019: 25). உதாரணமாக நீதி என்பது நன்மை என்ற எண்ணக்கருவோடு தொடர்புபடுத்தியே நோக்கவேண்டியுள்ளது. மக்களைப் பொறுத்தவரையில் ஒரு சாராருக்கு நன்மையாகத் (நீதி) தோன்றுபவை மற்றைய பிரிவினருக்கு தீமையாகவோ அநீதியாகவோ தோன்ற வாய்ப்புள்ளது எனலாம் (சாமிநாத சர்மா, வெ., 1985: 27-79). ஒரு பேரூந்து ஓட்டுனர் பேரூந்தில் இருக்கும் இருபது பேரைக் காப்பாற்றுவதற்காகத் தெருவில் வந்துகொண்டிருக்கும் ஒரு குழந்தையை விபத்துக்குள்ளாக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்னும் சந்தர்ப்பத்தில் அவர் அனேக மக்களின் உயிருக்காக ஒரு குழந்தையை பலியாக்குவது பேரூந்து ஓட்டுணருக்கு நீதியாகத் தோன்றலாம். ஆனால் அக்குழந்தையின் சார்பில் பார்த்தால் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு அங்கு அநீதி இளைக்கப்படுகின்றது. எனவேதான் பிளேட்டோ குறிப்பிடும் நீதி என்ற எண்ணக்கருவாக்கம் இங்கு கேள்விக்குறியாக்கப்படுகின்றது.

சமத்துவம் தொடர்பாக பிளேட்டோ குடியரசில் குறிப்பிடும்போது அவர் மனித வர்க்கத்தை மூன்றாகப் பிரித்துள்ளார். ஒவ்வொரு வர்க்கத்தினரும் தனித்துவமானவர்கள். அவர்களுக்குரிய கடமைகளும் பொறுப்புகளும் வெவ்வேறானவை. (குடியரசு: 98-104) இவருடைய இலட்சிய அரசின் சமுதாயக் கட்டமைப்பில் அவரவர் தனது பணியை செய்வதால் ஆளுமை வளர்வதற்கு இடமில்லாமல் போகின்றது. அதாவது, ஒவ்வொருவரும் தங்களுக்குரிய விடயங்களில் தேர்ச்சி பெறுவர் என்பது, தனி மனித ஆளுமையினை விருத்தியடையச் செய்யாது. மனிதர்கள் ஒவ்வொருவரும் சமத்துவத்தன்மை கொண்டவர்கள் அல்ல என்பதை அவரது சிந்தனையில் காணமுடிகின்றது. ஆனால் இன்றைய ஜனநாயகத்தில் சமத்துவம், சகோதரத்துவம் என்பது மிக முக்கியமானதாகவும் அதற்குரிய தனித்துவமான சிறப்பியல்பு கொண்டதாகவும் காணப்படுகின்றது. மனிதர் அனைவரும் சமத்துவமாக மதிக்கப்படும் தன்மையே இன்று காணப்படுகின்றது. எந்தவொரு பதவிக்கும் பொறுப்புக்கும் யாவரும் தகுதியுடையவர்கள் என்ற சமத்துவ பண்பைக் காணமுடியும்.

உதாரணமாக ஆண், பெண் என இரு வெவ்வேறு வர்க்கத்தினரை எடுத்துக்கொண்டால் பிளேட்டோ குறிப்பிடுவதைப் போன்று இவர்களின் கடமைகளும் பொறுப்புகளும் வெவ்வேறானவை எனக் கருதமுடியாது. குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலைகள் போன்ற அன்றாட கடமைகளை இருவரும் இணைந்தே மேற்கொள்ள வேண்டிய சூழலே இன்றைய காலப்பகுதியில் தோன்றியுள்ளது எனலாம்.

சோவியத் நாடு வீட்டு வேலைகளில் ஆணும் பெண்ணும் சமமாக ஈடுபட வேண்டும் எனும் சட்டத்தை உருவாக்கியுள்ளது. வேலைகளில் உயர்வு, தாழ்வோ ஆண்-பெண் பேதமோ இருக்கக் கூடாது என்ற நோக்கில் இச்சட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது. பெண், சமூக உழைப்பில் ஈடுபடுவதை அந்நாட்டுச் சட்டம் உறுதிசெய்தது. அதற்கு உதவியாகக் குழந்தைகள் பராமரிப்பு, வீடுகளிலிருந்து சமைத்தல், துணி துவைத்தல் ஆகிய மூன்று முக்கிய வேலைகளை அரசே எடுத்துக்கொண்டது. குழந்தைகள் காப்பகங்கள், சமூக அடுப்பறைகள், சமூக சலவையகம் ஆகியவற்றை உருவாக்கி

அன்றாடக் குடும்பச் சுமையை அரசே பொறுப்பேற்றுக்கொண்டது. இதனால், பெண்கள் வேலைக்குப் போவது எளிதானதாக ஆக்கப்பட்டது. ‘நச்சரிக்கும் வீட்டு வேலைகளிலிருந்து பெண்களை விடுவிக்காமல் மனித குல விடுதலை சாத்தியமல்ல’ என்ற லெனினின் வாசகம் அங்கே சட்டபூர்வ நடவடிக்கைகள் மூலம் அமுலுக்கு வந்தது.

அன்றாட வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் சமத்துவத்துடன் வாழாமல் சட்டத்தின் முன் ஆண்-பெண் சமத்துவம் கொண்டுவருவது சாத்தியமே இல்லை என்ற நோக்கில் இச்சட்ட முறைமை வடிவமைக்கப்பட்டிருப்பதானது பிளேட்டோ சமத்துவம் பற்றிக் கூறும் கருத்திற்கு முற்றிலும் எதிர்மாறானதாக உள்ளது.

ஜனநாயக அரசு பற்றிய சிந்தனையில் வலுவேறாக்கம் (Separation of Power) என்ற எண்ணக்கரு முக்கியமானது. அதிகாரங்கள் பிரித்துப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை போன்றவற்றிற்கு அதிகாரங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுவதுடன் அவ்வவ் துறைகள் பொறுப்பு வாய்ந்ததாகவும் விளங்க வேண்டும் என யாப்புகளில் வரையறுக்கப்பட்டுள்ளன. (Raphael. D.D., 1990: 92-94) இதனை நாம் பிளேட்டோவின் குடியரசில் பார்க்கும்போது மனிதர்களில் ஆட்சியாளர், பாதுகாவலன், பொதுமக்கள் என்ற பாகுபாட்டை மேற்கொண்ட பிளேட்டோ ஆட்சியாளனே சகல அதிகாரங்களையும் கொண்டவனாகவும் சட்ட, நிர்வாக, நீதித் துறைகளின் தலைவனாகவும் உள்ளான் என்றார். (குடியரசு: 276) அதிகாரங்கள் குவிந்து கிடப்பது சர்வாதிகார ஆட்சிக்கும் தத்துணிவிற்கும் வழிவகுக்கும் என்ற கருத்தோடு ஒத்துச் செல்கின்றது. அரசர்களுக்கு வழங்கப்படும் மேலான அதிகாரங்கள் மக்களாட்சி மக்களின் சமத்துவத்தை இல்லாது ஒழிக்கிறது. ஆனால் இன்றைய சமகால ஆட்சியின் போது அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு சட்ட, நிர்வாக, நீதித் துறைகள் சுயாதீனமாக செய்யப்பட்டுவருகின்றமை பிளேட்டோவின் சிந்தனையை தலைகீழாகப் புரட்டியுள்ளது.

அரசியல் பங்குபற்றல் (Political Participation) என்பதும் ஜனநாயக எண்ணக்கருக்களில் முக்கியமானது. நாட்டில் எந்த நிகழ்விலோ அரசியல் சம்பந்தமான விடயங்களிலோ பங்குபற்றுவதற்கு யாவருக்கும் உரிமையுண்டு. இன, மத வேறுபாடுகளைத் தாண்டி யாவரும் அரசியல் தீர்மானங்களை மேறகொள்ளல், கொள்கை உருவாக்கம், கொள்கை அமுலாக்கச் செயன்முறைகள் முதலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். இதன் மூலம் சர்வதிகாரப் போக்கு இல்லாது போவதுடன் மக்கள் தாங்கள் விரும்பிய அரசாங்கத்தினை ஆட்சியில் அமர்த்தவும் ஊழல்கள் அற்ற அரசியல் அபிவிருத்திக்கும் வழியேற்படுகின்றது. பிளேட்டோ எல்லோரும் எல்லா விடயங்களிலும் பங்கு கொள்ளமுடியாது. ஒவ்வொருவரும் அவரவருக்குரிய பணிகளையே ஆற்ற முடியும் எனக் கூறுவது தனிமனித ஆளுமை விருத்திக்குத் தடையாக அமையும். ஒவ்வொருவரும் அவரவர் பணிகளில் தேர்ச்சி பெறுவர் என்பது தனிமனித ஆளுமையை விருத்தியடைச் செய்யாது.

பிளேட்டோ குடியுரிமை (Citizenship) பற்றிக் குறிப்பிடும் போது அதனை வரையறுக்கப்பட்ட ஒன்றாகவே கருதினார். பிரஜைகள் என்பவர்கள் ஏனையவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாகவும் உயர் அந்தஸ்த்தை உடையவர்களாகவும் காணப்பட்டனர். குடியரிமை ஆண்களுக்கு மட்டும் உரியதாக இருந்தது. பெண்களுக்கும் அக்காலத்தில் அடிமைகள் என்போருக்கும் சொத்துக்களை வைத்திருத்தல், குடியுரிமை என்பன மறுக்கப்பட்டன. பிளேட்டோ, ஒருவர் குடியுரிமை பெறவேண்டுமாக இருந்தால் அவர் எதென்சில் நகர அரசில் எதென்சிய நாட்டில் பிறந்தவராக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அதாவது கிரேக்கத்தில் பிறந்த கல்விகற்ற ஆண்மகனுக்குதான் குடியுரிமை என்றார். இது இன்றைய ஜனநாயக அரசு என்னும் எண்ணக்கருவிற்கு முற்றிலும் மாறானதாகும். இன்றைய ஜனநாயக நாடுகள் குடியுரிமையை மக்களின் கலாசாரம், மொழி, மதம் போன்ற எதனோடும் தொடர்புபடுத்திப் பார்க்கவில்லை. அதேபோன்று ஆண், பெண் என்ற பால்வேறுபாடோ, சொத்துடயவர், சொத்தற்றவர் என்ற வேறுபாடோ இன்றி நாட்டுப் பிரஜைகள் அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்படும் போக்கினைக் காணமுடிகின்றது. அதேபோன்று இன்றயை அரசியலில் பெண்களும் உள்வாங்கப்படுவதோடு நாட்டின் தலைவர்களாகவும், சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்ற அனைத்து துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்று அதிகரித்துச் செல்வது பிளேட்டோ பெண்களுக்கு குடியுரிமை, சொத்துரிமை போன்ற உரிமைகளை விலக்கி பெண்களை அரசியல் வலுவற்றவர்களாக காட்டிய நிலமையினை மாற்றி புதிய போக்கினை உருவாக்கியமையை தெளிவாகக் காட்டுகின்றது.

பிளேட்டோ தன்னுடைய கருத்துக்களினுடாக எவ்வாறு நாம் தண்டனையை நியாயப்படுத்த முடியும் என்ற கருத்தை முதன்மைப்படுத்தியுள்ளார். சோக்கிரடீஸின் நீதியற்ற தண்டனையானது பிளேட்டோவிடத்தில் தண்டனையின் போதான நீதியை பேனுவது பற்றிய சிந்தனையை தூண்டியது. பிளேட்டோ சட்டம் (Laws) எனும் தன்னுடைய படைப்பில் தண்டனை குறித்து பின்வருமாறு குறிப்பிடுகின்றார். கடந்து போன விடயங்களுக்காகப் பழிவாங்குதல் அல்லது தண்டனை வழங்காதிருத்தல் என்பது எதிர்காலத்தில் குற்றங்கள் நிகழ்த்தப்படுவதனை குறைக்கும் என்றார். அதாவது தண்டிக்கப்படுபவனும் அதனைப் பார்ப்பவர்களும் ஏனையோரும் குற்றம் செய்யாமல் இருக்கக் கற்றுக்கொள்வார்கள் என்றார்.

முற்பட ஆற்றிய ஓர் பிழையான செயலுக்காகத் தண்டிக்க கூடாது என பிளேட்டோ கூறியுள்ளார். இருப்பினும் இதனை ஏற்பதற்கான நிலையையும் இவர் முன்வைக்கின்றார். தண்டனை தன்னளவில் நன்மையானது இல்லை ஆனால் அது தீமையை அல்லது குற்றத்தைக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது அல்லது அதற்கு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது என்ற அடிப்படையில் இது ஏற்றுக்கொள்ளக்கூடியது என்கிறார்.

தற்கால சூழலைப் பொறுத்தவரையில் ஒருவருக்கு அவர் புரியும் குற்றத்திற்கான தண்டனை என்பது உடனே வழங்கப்படுவது இல்லை. ஒருவருக்கான குற்றம் நீதிமன்றத்தில் நிருபிக்கப்படுவதற்கே பலவருடங்கள் ஆகிவிடும் தன்மையினைக் காணமுடிகின்றது. எனவே பிளேட்டோ குறிப்பிடும்

‘‘முற்பட ஆற்றிய குற்றம்’’ என்பதற்குள்ளே எல்லாவகைக் குற்றங்களையும் கொண்டுவரப்படக்கூடிய நிலமையே காணப்படுகின்றது. காரணம் தீர்ப்பு வழங்கப்படும் காலத்தில் இருந்து நோக்கும்போது குற்றம் புரிந்த காலம் என்பது முற்பட்ட காலமே ஆகும். அதற்காக முற்பட ஆற்றிய குற்றத்திற்காக தண்டனை வழங்கக்கூடாது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

உதாரணமாக 2015ம் ஆண்டின் 4ம் இலக்க குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டம் என்பதை எடுத்துக்கொண்டால் ஏற்கனவே ஒரு குற்றச்செயலுக்காக நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் ஒருவர் தனக்கு எதிரான சாட்சியினை சாட்சி கூறவிடாமல் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தடுக்கும்போது அவருக்கு எதிராக வழக்கு தொடரப்படும் சட்டமாகும். இங்கு ஒருவருக்கு இச்சட்டத்தை பிரயோகிக்கவேண்டுமாக இருந்தால் அவர் முற்பட்ட குற்றம் ஆற்றியிருக்க வேண்டும். இப்படியாயின் முற்பட்ட குற்றத்திற்காக ஒருவர் தண்டிக்கப்படகூடாது என பிளேட்டோ கூறுவது எவ்வகையிலும் இச்சட்டத்திற்கு செல்லுபடியற்றதாகவே இருக்கின்றது. எனவே பிளேட்டோ குறிப்பிடும் தண்டனை பற்றிய கருத்தாக்கமும் விமர்சிக்கத்தக்கதாகவே உள்ளது.

ஒரு நாட்டிற்கு அரசியல் அமைப்பு என்பது அவசியமானது. ஆள்வோரும் ஆளப்படுவோரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் அவர்களை ஒரு வரையறைக்குள் ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியமாகும். மறதியும் தவறும் மனிதர்களுடன் கூடவே பிறந்த குணவியல்பாகும். இதனால் மனித மனத்தை மதிநுட்பத்துடன் நோக்குவது கடினமாகும். ஆகவே இவர்கள் ஒழுங்கு முறைப்படி தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சட்ட திட்டங்கள் அவசியமானது. இதற்காக முன்வைக்கப்பட்டதொரு ஜனநாயக எண்ணக்கருவே அரசியல் அமைப்பு வாதமாகும். இதில் பிரதானமாக அடங்கியிருப்பது சட்டவாட்சித் தத்துவாகும் சட்டத்தை மீறுபவர் தண்டிக்கப்பட வேண்டும் அதற்கு எவரும் விதி விலக்கானவர்களாக அமைந்து விடக்கூடாது. இதனால் ஒரு அரசியல் அமைப்பை அடிப்படையாக கொண்ட ஆட்சி முறை தேவைப்படுகிறது. அரசியல் அமைப்பு என்பது அடிப்படை சட்டமாகும். இது ஆள்வோரையும் ஆளப்படுவோரையும் ஓர் ஒழுங்கிற்குள் கொண்டு வருவதாகும். இதனால் அரசியல் அமைப்பு ஒன்று வரையப்படும் போது தேசத்தின் மக்களை மேம்படுத்துவதற்காக அமைய வேண்டும். இதனாலேயே யாப்புறுவாத ஆட்சி முறையை உருவாக்கலாம். அரசியல் அமைப்பு தம்மை வழிப்படுத்துபவன் வழிகாட்டி என்ற உயர்ந்த கௌரவத்தை கொண்டதாக அது அமையப்பெறின் அரசியல் சிந்தனையாளர்கள் எதிர்பார்த்த இலட்சிய சமூகத்தை அடையலாம். ஆனால் பிடேட்டோவின் சிந்தனையில் யாப்பு சட்டவாட்சி எல்லாம் மன்னனுக்குள் அடங்கிவிடும். மன்னனுக்கு வழங்கப்படும் அதிகாரம் வல்லாட்சிக்கு வழிவகுக்குமே அல்லாமல் நல்லாட்சிக்கு வழிவகுக்காது. அரசின் ஆனையை எதிர்க்கும் ஜனநாயக உரிமை என்பது இங்கு மறுக்கப்படுகின்றது.

பிளேட்டோ கல்வி தொடர்பாக தனது குடியரசில் குறிப்பிடும்போது, ‘‘கல்வி என்பது உயிரின் கண்களை ஒளியை நோக்கித் திருப்புவதாகும். அறிவு சார் கருத்துக்களை ஆன்மாவினுள் திணிப்பது உண்மையான கல்வியாகாது உயிரினுள் புதைந்திருக்கும் நற்பண்புகளை இயல்பாக

வெளிபடச் செய்வதே உண்மையான கல்வியாகும்.'' இங்கு 'நல்லொழுக்கமே நல்லறிவு' என்ற சோக்ரடீஸின் கருத்திற்கு அமைவாக இலட்சிய அரசின் ஆட்சியாளனுக்குரிய கல்வி முறையையே பிளேட்டோ தர்க்க விவாதங்களுடாக பரிந்துரை செய்கின்றார். (குடியரசு: 192-194) சமகால அரசியலில் பேசப்படும் கல்வி என்ற எண்ணக்கருவைப் பார்க்கும் போது அனைவருக்கும் கல்வி பால் வேறுபாடுகள் அற்ற கல்வி என்ற விடயம் பிளேட்டோவின் சிந்தனைகளுடன் முரண்பட்டு செல்கிறது. பிளேட்டோ அனைவருக்கும் கல்வி என்ற சிந்தனையில் ஒரு சமூக அடுக்கமைவைப் புகுத்தி, அவர் அவர் அவரவருக்குரிய கல்வியையே பயில வேண்டும் என்றும் ஆண்களுக்கே கல்வியை கட்டாயப்படுத்தியமையும் சமகாலத்துக்கு ஏற்புடையதாக அமையவில்லை.

## 5.0 முடிவுரை

பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனை உயர் எண்ணமும் உயர் இலட்சியமும் கொண்டதாயினும் சமகால அரசியல் எண்ணக்கருக்களில் பின்பற்ற முடியாத ஓர் அரசியல் சிந்தனையாக உள்ளது. உலகில் எந்தவொரு நாட்டிலும் பிளேட்டோவின் அரசியல் சிந்தனையை பின்பற்றியதாக அறிய முடியவில்லை. உலகிலுள்ள பல துகைளில் மதிப்புமிக்க பேராளுமையாக பிளேட்டோ மதிக்கப்பட்டபோதும் இவரது அரசியல் மெய்யியல் சிந்தனைகள் ஜனநாயகம் என்ற மக்களாட்சிக்கும் அதனுள் அடங்கும் எண்ணக்கருக்களுக்கும் எதிரானதாக இருந்ததனால்தான் ஜனநாயகத்தின் எதிரி என அழைக்கப்பட்டார். எனவே பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனைகள் சமகால அரசு பற்றிய ஜனநாயக எண்ணக்கருக்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகளில் காணப்படுகின்ற விடயங்கள் ஒரு சாதாரண குடிமகனாலும், அறிவிலிகளாலும், ஒழுக்கமற்றவர்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகவே அமையும். முழுமையான ஒழுக்கமுடைய சமுதாயத்தினுடைய தோற்றம் எப்பொழுது நிகழ்கின்றதோ அப்பொழுதே அவரின் கற்பனை நிறைவேறும்.

**உசாத்துணை**


அனஸ், எம்.எஸ்.எம்., (2003), *மெய்யியல் அறிமுக உரைகள்*, பேராதனை: பண்பாட்டு வட்டம்.

…………………….., (2018), *மெய்யியல்: கிரேக்கம் முதல் தற்காலம் வரை*, கொழும்பு, சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சார்ள்ஸ் வெரேக்கர் சபாரத்தினம் த., (தமிழில்) : (1973), *அரசியற் கொள்கையின் வளர்சி*, கொழும்பு : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

சாமிநாத சர்மா, வே., (மொ.பெ) (1986), *பிளேட்டோவின் அரசியல்,* சென்னை: திருமகள் நிலையம்.

சிவராஜா, அ., (2008), *அரசறிவியல் மூல தத்துவங்கள்*, கொழும்பு, சென்னை: குமரன் புத்தக இல்லம்.

தமிழ்மாறன். வி.ரி., (1998), *ஒப்பீட்டுச் சட்டம் ஒரு சில சிந்தனைகள்*, சென்னை: மதுரி மலர்வகம்,.

நாராயணன், க., (1989), *மேலைநாட்டு மெய்ப்பொருள்,* சென்னை: தமிழ் புத்தகாலயம்.

யோகராஜா. ஆ., (2020), *சமகால அரசறிவியல் ஓர் அறிமுகம்*, கொழும்பு, சென்னை : குமரன் புத்தக இல்லம்.

ராகுல் சாங்கிருத்யாயன், (1985) *ஐரோப்பியத் தத்துவங்கள்*, சென்னை: நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.

ராமானுஜாசாரி. ஆர்., (மொ.பெ) (1986), *பிளேட்டோவின் குடியரசு,* புதுதில்லி: சாகித்திய அகாடமி.

றியால், ஏ. எல். எம்., மாஹிர், ஐ. எல். எம்., (2014) *Journal of Social Review Volume 2* "தோமஸ் ஹொப்ஸின் நீதி பற்றிய எண்ணக்கரு", ஒலுவில்: சமூக விஞ்ஞானத்துறை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஜமாஹீர். பீ.எம், (2010) *மெய்யியல் - பிரச்சினைகளும் பிரயோகங்களும்*, கண்டி: நதா வெளியீடு.

ஜெகநாதன், சோ., (2018), *தமிழர் மரபில் மெய்யியல் சிந்தனைகள் - ஒரு நோக்கு* நெய்தல், தொகுதி : 09 எண் : 01, இலங்கை – வந்தாறுமூலை: கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

………………. (2019), *பிளேட்டோ பேசும் நீதி : ஓர் அரசியல்சார் மெய்யியற் பார்வை*

நெய்தல், தொகுதி : 10 எண் : 02, இலங்கை – வந்தாறுமூலை: கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

Aquinas, Thomas. (1946) *Summa Theologiae* I Iae, Q.1-119. Trans. by Fathers of English Dominican Province, New York: Benziger Brothers Inc.

Aristotle. (1941) *Politocs* in the Basic Works of Aristotle. Ed. by. Richard Mckeon. New York: Random House.

Aumann, Francis R. “Justice” in Collier’s Encyclopedia. Ed. by William D, Halsey and Louis Shores (USA: Crowell-Collier Education Co-operation, 1969).

Daicy. A.V., (1979) *An Introduction to the Study of the Law of the Constitution*, London: The Macmillan Press Ltd.

Dudley Knowles, (2001), *Political Philosophy*, London and New York: Routledge.

Hobbes, Thomas., (1969), *Leviathan* Ed. by Michael Oakeshott. London: Collier – Mavmillan Ltd.

Raphael, D.D., (1992), *Problems of Political Philosophy*, London: the Macmillan Press LTD.